<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 134/2021**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அங்காத்தாள் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 09.11.2023 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023 ஆண்டு நவம்பர் 09 ம் நாள் சாட்சியம்.

---

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கன்னிவாடி கிராமம் குளத்துப்பாளையத்தில் குடியிருக்கிறேன். 1983 ல் மாரிச்சாமிகவுண்டர், செல்லப்பகவுண்டர், செல்லமுத்துகவுண்டர், சுப்பிரமணியகவுண்டர், மருதய கவுண்டர் ஆகியோருக்கு கூட்டாக பாகப்பிரிவினையில் B செட்யூல் சொத்தாக தாவா சொத்து பிரிந்தது என்றால் ஆமாம். என் கணவர் 20 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். எனது கணவருக்கும், எனக்கும் ஒரே மகன் குப்புச்சாமி மட்டும் தான், அவர் திருமணமாகாமல் இறந்துவிட்டார். தாவா சொத்து எனக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு எந்த ஆவணமும் தாக்ல செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. என் கணவருடனான மற்ற பாகஸ்தர்களுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். செல்லப்பகவுண்டர், செல்லமுத்துகவுண்டர், சுப்பிரமணியகவுண்டர், மருதய கவுண்டர் மேற்படி நபர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை

என்றால் சரியல்ல. ஜெகநாதன், பெரியசாமி இருவரும் சேர்ந்து 2007ம் வருடம் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி ஜெகநாதன், பெரியசாமியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. செல்லமுத்து, சத்தியகலா, லட்சுமி மூவரும் சேர்ந்து பாகக்கரார் செய்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை செய்து கொண்ட பின்பு தான் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. சத்தியகலா, பிரபுவிற்கு கிரையம் செய்து கொடுத்த விவரம் வில்லங்கசான்றிதழ் எடுத்து பார்த்து தெரிந்து கொண்டேன். வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பூமியில் உள்ள பொதுக்கிணற்றில் 2ம் பிரதிவாதிக்கு ஒரு செல்லமுத்து, லட்சுமி என்பவருக்கு கிணற்றில் தண்ணீர் பாய்ச்சுவதற்கும், கிணற்றிலிருந்து தெற்கே வந்து, மேற்கே போவதற்கு உரிமை உண்டு என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. செல்லமுத்து, லட்சுமியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

4. 2011 ல் சத்தியகலா, லட்சுமி, செல்லமுத்து மூவரும் சேர்ந்து பாகக்கரால் செய்து கொண்டார்கள், அந்த ஆவணத்தை ரத்து செய்ய கோரி இவ்வழக்கில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. மூல ஆவணத்தை ரத்து செய்யுமாறு கோராமல் 15.01.2021 தேதியிட்ட ஆவணத்தை ரத்து செய்ய கோர இயலாது என்றால் சரியல்ல. பாகக்கரால் ஆவணத்தை ரத்து செய்யுமாறு கோரினால் செல்லமுத்துவிற்கும், லட்சுமிக்கும், எனக்குள்ளும் வேற்றுமை ஏற்படும் என்பதால் தான், அவ்வாறு பரிகாரம் கோரவில்லை

என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 45 செண்ட் எழுதிக் கொடுத்த விஸ்தீரணம் குறித்து எனக்கு ஆட்சேபணை இல்லையென்றால் உள்ளது.

5. வாய்க்காலில் தண்ணீர் ஓட்டும் உரிமை யார், யாருக்கு உள்ளது என்றால் லட்சுமி, செல்லமுத்து, பிரபு ஆகியோருக்கு உரிமையுள்ளது. தண்ணீர் ஓட்டும் உரிமை ஒருவருக்கு மட்டும் இருந்தால் தான் தனி வாய்க்கால் என்று எழுதுவார்கள், மூவருக்கும் உரிமையுள்ளதால் தான் பொது வாய்க்கால் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை விலைக்கு வாங்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தேவையான தரப்பினர்களை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. தாவாச் சொத்து குறித்து முழுமையான உரிமை மாற்றம் ஏற்படவில்லை, அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லாததால், வழக்கு நிலைக்கத்தக்கதல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

**Sd/- Ms.Mathivathani Vanangamudi**,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.